## இலங்கை தேசிய மனித வளங்கள் அபிவிருத்திப் பேரவை – 2017

-----------------------------------------------------------------------------------------------------------

இலங்கை தேசிய மனித வளங்கள் அபிவிருத்திப் பேரவையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) பிரிவு மற்றும் 1997 இன் 18 ஆம் இலக்க இலங்கை தேசிய மனித வளங்கள் அபிவிருத்திப் பேரவை அதிகாரச்சட்டத்தின் 24 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் பேரவையின் ஆண்டறிக்கையுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

-----------------------------------------------------------------------------------------------------------

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

-----------------------------------------------------

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். உயர் கணக்காய்வு நிறுவனத்தின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000 – 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் பேரவையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி பேரவையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்திற்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

நிதிக்கூற்றுக்களானவை இலங்கை தேசிய மனித வளங்கள் அபிவிருத்திப் பேரவையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 செலுத்த வேண்டிய கணக்குகள்

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய மீதிகளின் பெறுமானம் ரூபா 1,192,086 ஆக இருநததுடன் அதில் உழைப்புச் சந்தை கணிப்பீட்டிற்காக செலுத்த வேண்டிய ரூபா 250,000 ஆன மீதியென்று ஓராண்டிற்கு மேற்பட்ட காலமாக தீர்வுசெய்யப்படாமல் காணப்பட்டது.

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

1997 இன் 18 ஆம் இலக்க மனித வளங்களை அபிவிருத்தி செய்யும் இலங்கை தேசிய மனித வளங்கள் அபிவிருத்திப் பேரவை அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் பேரவையினால் ஒரு நிதியாண்டிற்காக ஆகக் குறைந்தது 12 கூட்டங்கள் கூட்டப்பட வேண்டிய போதிலும் 2017 ஆம் ஆண்டிற்காக 04 கூட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் போது பேரவையின் நிதி விளைவுகள் ரூபா 4,167,580 மிகையொன்றாக இருந்ததுடன் அதனோடெத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 945,003 ஆக இருந்தது. முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 3,222,577 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் ரூபா 5,788,680 இலாபம் உழைத்தமை இந்த அதிகரிப்பிற்கு பிரதான காரணமாக இருந்தது. மீளாய்வாண்டினதும் முன்னைய 4 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2015 ஆம் ஆண்டின் போது பற்றாக்குறையொன்றும் ஏனைய ஆண்டுகளில் நிதி மிகையொன்றினையும் காண்பித்தன. ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பவற்றைக் கவனத்தில் கொண்டதன் பின்னர் பேரவையின் பங்களிப்பு 2013 ஆம் ஆண்டில் ரூபா 9,634,876 இலிருந்து 2017 ஆம் ஆண்டில் ரூபா 21,610,655 வரை தொடர்ச்சியான அதிகரிப்பொன்று தென்பட்டது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 செயற்பாடுகளும் மீளாய்வும்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 ஆம் ஆண்டின் திருத்திய செயல்நடவடிக்கைத் திட்டத்தின் மூலம் 29 செயற்திட்டங்கள் / நிகழ்ச்சித்திட்டங்கள் என்பவற்றை பூர்த்தி செய்வதற்காக ரூபா 15.65 மில்லியன் நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் நிகழ்ச்சித்திட்டங்கள் / செயற்திட்டங்கள் என்பவற்றை அமுல்படுத்துவதற்காக ரூபா 17.39 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை அளவினை மிகைத்து ரூபா 1.74 மில்லியன் செலவிடப்பட்டிருந்தன.

(ஆ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த ரூபா 2.93 மில்லியனான 08 நிகழ்ச்சித்திட்டங்கள் / செயற்திட்டங்கள் என்பவற்றை பூர்ததி செய்ய முடியாதிருந்ததுடன் அதற்கிடையே ரூபா 0.65 மில்லியனான 03 நிகழ்ச்சித்திட்டங்களின் பௌதீக செயலாற்றல் 50 சதவீதத்திற்கு குறைந்த மட்டத்தில் காணப்பட்டன.

(இ) தேசிய மனித வளங்கள் அபிவிருத்தி பேரவையினால் வருடாந்தம் 2 சஞ்சிகைகள தயாரித்து வெளியிடுவதற்கு இலக்கிடப்பட்டிருந்த போதிலும் 2017 ஆம் ஆண்டின் போது அதில் ஒரு சஞ்சிகையே வழங்கப்பட்டிருந்தது.

## 5. நிலைபேறான அபிவிருத்தி

#### 5.1.1 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளுதல்

நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2030 ''நிகழ்ச்சி நிரல்'' இன் பிரகாரம் சகல அரச நிறுவனங்களாலும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதாக காணப்பட்டதுடன் மீளாய்வாண்டிற்குரியதாக மனித வளங்கள் அபிவிருத்தி தொடர்பாக இலங்கை தேசிய பேரவையினால் தமது விடயப்பரப்பின் கீழ் வரும் செயற்பாடுகள் தொடர்பாக எவ்வாறு செயற்பட வேண்டுமென்பது தொடர்பாக தெளிவாக அறிந்திருக்கவில்லை.

## 6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 6.1 உள்ளகக் கணக்காய்வு

பேரவையினுள் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று ஸதாபிக்கப்படாதிருந்ததுடன் அமைச்சின் உள்ளக கணக்காய்வுப் பிரிவின் மூலமும் ஆண்டின் போது எவ்வித கணக்காய்வொன்றும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளரால் வழங்கப்பட்டிருந்த 2011 நவம்பர் 15 ஆந் திகதிய டீஎம்ஏ/06 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வுச் சுற்றறிக்கையின் மூலம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் போதியளவு மதிப்பிடுவதற்காக உள்ளகக் கணக்காய்வின் தேவைப்பாடு குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 6.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) மீளாய்வாண்டிற்கான பாதீடு 2017 திசெம்பர் மாதத்தின் போது திருத்தப்பட்டிருந்த போதிலும் அதற்காக பேரவையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) திருத்திய பாதீட்டின் பிரகாரம் மீண்டெழும் செலவினங்களில் 10 சதவீத்தலிருந்து 65 சதவீதம் வரையும் மூலதனச் செலவினங்களில் 20 15 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையில் விலகல் அவதானிக்கப்பட்டது. பாதீட்டின் மூலம் நிதிஏற்பாடு ஒதுக்கப்படாத கணனி கொள்வனவிற்காக ரூபா 527,420 செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் வாகனக் கொள்வனவிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 400,000 ஆன முழு நிதிஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

## 6.3 தீர்வு செய்யப்படாத கணக்காய்வுப் பந்திகள்

நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் காணப்படும் ரூபா 354,332 தொகையான 26 நிலையான சொத்து உருப்படிகளில் பற்றாக்குறை தொடர்பாக 2015 நவம்பர் 19 ஆந் திகதிய பரிசோதனை அறிக்கையிலான பரிந்துரைகள் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 7. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது பேரவையின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படவேண்டும்.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) சொத்துக்கள் கட்டுப்பாடு | சொத்துக்களை அகற்றும் போது சரியான நடைமுறைகளைப் பின்பற்றாமை. |
| (ஆ) செயலாற்றல் | சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு போதியளவு நிகழ்ச்சித்திட்டங்கள் தயாரிக்கப்பட்டு செயற்படுத்தப்படாமை. |